தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்,சென்னை–6.

ந.க.எண்.22327/ டி1 /2023, நாள். 07 .09.2023

பொருள் : தொடக்கக் கல்வி – சென்னை மாநகராட்சி – பட்டதாரி ஆசிரியர், இடைநிலை ஆசிரியர், புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகளில் உள்ள காலிப்பணியிடத்திற்கு அலகு விட்டு அலகு பணியிட மாறுதல் – கலந்தாய்வு மூலம் பங்கேற்க – விண்ணப்பங்களை கல்வி தகவல் மேலாண்மை முறைமை ( EMIS) இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது – சார்பு.

பார்வை : கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி.சென்னை-3.க.து.ந.க.எண்இ4/இ3/1109/2023 நாள் 04.09.2023

பார்வை காண் கடிதத்தில் சென்னை மாவட்டம் மற்றும் பிற மாவட்டத்திலுள்ள இடைநிலை ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்கள் ஆகியோர், பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரிய விருப்பம் உள்ள ஆசிரியர்களின், விண்ணப்பங்கள் 11.09.2023 முதல் 30.09.2023 நாளில் EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, கலந்தாய்வு மூலம் தங்களுக்கு தேவையான பணியிடங்களை தேர்வு செய்து கொள்ள நடைமுறைபடுத்தப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் அலகு விட்டு அலகு மாறுதல் மூலம் சென்னை மாவட்டம் மற்றும் பிற மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரிய விருப்பம் உள்ள பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர்கள், EMIS இணையதள வாயிலாக 11.09.2023 முதல் 30.09.2023 நாட்களுக்குள் தங்கள் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய அறுவுறுத்துமாறு கோரியுள்ளார்.

எனவே பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு அலகு விட்டு அலகு மாறுதல் மூலம் செல்ல விருப்பம் உள்ள இடைநிலை ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்களை, EMIS இணையதள வாயிலாக 11.09.2023 முதல் 30.09.2023 நாட்களுக்குள் தங்கள் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய தக்க அறிவுரை வழங்க அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் ( தொடக்கக் கல்வி) தெரிவிக்கலாகிறது.

இணைப்பு :

பார்வை காண் கடிதம்.

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர் :

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் ( தொடக்கக் கல்வி).

நகல்

கூடுதல் தலைமைச் செயலார்/ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.சென்னை – 3

| அனுப்புநர்: | பெறுநர்: |
|---|---|
| கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர்<br>பெருநகர சென்னை மாநகராட்சி<br>அம்மா மாளிகை,<br>சென்னை-600 003. | இயக்குநர்,<br>தொடக்கக்கல்வித்துறை,<br>தொடக்கக்கல்வி இயக்ககம்,<br>DPI வளாகம்,<br>கல்லூரி சாலை,<br>சென்னை-600 006. |

07/09/2023

ந.க.எண்.இ4/இ3/1109/2023 நாள்: 04 .09.2023

022327

பொருள்: பணியமைப்பு- பெருநகர சென்னை மாநகராட்சி -கல்வித்துறை - பெருநகர சென்னை மாநகராட்சி - பட்டதாரி ஆசிரியர், மற்றும் இடைநிலை ஆசிரியர், - பெருநகர சென்னை மாநகராட்சியுடன் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் உள்ள 139 பள்ளிகளில் உள்ள காலிப்பணியிடத்தில் - அலகு விட்டு அலகு பணியிட மாறுதல் - கலந்தாய்வு மூலம் பங்கேற்க - விண்ணப்பங்களை கல்வி தகவல் மேலாண்மைம முறைமை (EMIS) இணையதளத்தில் - பதிவேற்றம் செய்வது - தொடர்பாக அறிவுறுத்தல் சம்பந்தமாக.

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்ககம்
07 SEP 2023
சென்னை-600 006

பார்வை:
1. அரசாணை நிலை எண்.48, பள்ளிக்கல்வித் பக5(2) துறை, நாள்: 01.03.2023
2 அரசாணை(நிலை) எண்.176, பள்ளிக்கல்வி (பக5(1) துறை நாள்:17.12.2021
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6, நாள்: 26.06.2023.

******

பார்வை-1ல் கண்டுள்ளபடி, அரசாணை(நிலை) எண்.48, பள்ளிக்கல்வித் பக5(2) துறை, நாள்: 01.03.2023. பெருநகர சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள 139 பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகையான ஆசிரியர்கள், தன் விருப்பத்தின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநராட்சிக்கு ஈர்த்துக் கொள்ளப்படுவர் அல்லது அவர்கள் பணிபுரியும் ஒன்றியத்திலேயே பணியை தொடரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையில் தெரிவித்துள்ளவாறு, புதிதாக இணைக்கப்பட்டுள்ள 139 பள்ளிகளில் பணிபுரியும் 990 ஆசிரியர்களில் பெரும்பாலான ஆசிரியர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் தொடர்ந்து பணியுரிய விருப்பம் தெரிவித்து, பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் பள்ளிகளில் பணிபுரிகின்றனர். மற்றும் மற்ற ஆசிரியர்கள் தங்கள் தாய்துறையான பள்ளிக்கல்வித்துறை இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிய விருப்பம் தெரிவித்ததால் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பள்ளிகளின் 190 ஆசிரியர்கள் (**இடைநிலை ஆசிரியர்கள்-55, பட்டதாரி ஆசிரியர்கள்-91 (தமிழ்-18, ஆங்கிலம்-19, கணிதம்-16, அறிவியல்-24, சமூக அறிவியல்-14)** பணியிடங்கள் காலியாகவுள்ளது., இக்காலியாக உள்ள பணியிடங்களால், மாணவர்களின் கல்வி நலன் பாதிக்கப்படும் என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது

இச்சூழ்நிலையினை கருத்தில் கொண்டு, இக்காலிப்பணியிடங்களில் சென்னை மாவட்டம் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து அலகு விட்டு அலகு மாறுதல் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணியிட மாறுதல் பெற விருப்பம் உள்ள, **இடைநிலை ஆசிரியர்கள் /பட்டதாரி ஆசிரியர்கள்**, ஆகியோருக்கு, EMIS (இணையதளம்) வாயிலாக, பார்வை-2 மற்றும் 3ல் கண்டுள்ள, அரசாணை எண். 176, பள்ளிக்கல்வித்துறை, நாள்: 17.12.2023 மற்றும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை-6. ந.க.எண்.21243/சி3/இ1/2023, நாள்: 26.06.2023-ன்படி, தெரிவித்துள்ள வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தலின்படியே, Unit Transfer கலந்தாய்வு மூலம் ஆசிரியர்கள் பணியிடங்களை நிரப்பலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், சென்னை மாவட்டம் மற்றும் பிற மாவட்டத்திலுள்ள இடைநிலை ஆசிரியர்கள்/ பட்டதாரி ஆசிரியர்கள் ஆகியோர், பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளியில் பணிபுரிய விருப்பம் உள்ள ஆசிரியர்களின்,

விண்ணப்பங்கள் 11.09.2023 முதல் 30.09.2023 நாளில், EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, கலந்தாய்வு மூலம் தங்களுக்கு தேவையான பணியிடங்களை தேர்வு செய்து கொள்ள நடைமுறைபடுத்தப்பட உள்ளது

எனவே, மேற்கண்ட புதிதாக சேர்க்கப்பட்டுள்ள 139 பள்ளிகளில் உள்ள 190 காலிப்பணியிடங்களில், அலகு விட்டு அலகு மாறுதல் மூலம் சென்னை மாவட்டம் மற்றும் பிற மாவட்டத்திலில் உள்ள ஆசிரியர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி

பள்ளிகளில் பணிபுரிய விருப்பம் உள்ள பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர்கள், EMIS இணையதள வாயிலாக 11.09.2023 முதல் 28.09.2023 நாட்களுக்குள், தங்கள் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

துணை ஆணையர்(கல்வி)

நகல் :- அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள்.